சமூக சேவைகள் அமைச்சின் சுற்றுநிரூபம் - 2/2015

மாவட்டச் செயலாளர்,

மாவட்டச் செயலகம்,.

.....................................................................

**<u>2015 பாதீட்டுப் பிரேரணையின் பிரகாரம் பாடசாலையிற் கல்வி கற்கும் அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு ரூபா. 750/- போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவுகளை வழங்குதல்.</u>**

2015 பாதீட்டுப் பிரேரணையின் பிரகாரம் பாடசாலையிற் கல்வி கற்று வரும் அன்றாடம் வீட்டிலிருந்து பாடசாலை நோக்கிப் பிரயாணத்தினை மேற்கொள்ளும் அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு 2015 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மாணவர் ஒருவருக்குத் தலா ரூபா. 750/- வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவினை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொடுப்பனவினை அமுறப்படுத்தும் முறைமை.

1. பாடசாலைக் கல்வி பெற்று வரும் ரூபா. 3000/- ஐ விடக் குறைவான குடும்ப மாதாந்த வருமானத்தைக் கொண்ட அன்றாடம் வீட்டிலிருந்து பாடசாலை செல்லும் அங்கவீனமுற்ற மாணவர்களாக மட்டும் இருத்தல்.

2. அதன் பிரகாரம் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து (அதிபரின் பரிந்துரை, கிராம உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தரின் பரிந்துரைகளுடன் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்திற்கு) முன்வைத்தல் வேண்டும். (இணைப்பு 01)

3. 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுத் தங்களுக்கு இவ்வமைச்சினால் அனுப்பப்படும். ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கட்டுநிதியினைத் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பிரதேச செயலாளரினாற் பரிந்துரை செய்யப்பட்டு இவ்வமைச்சிலிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பாடசாலை மாணவர்களின் பட்டியலுக்கு மாத்திரம் (இணைப்பு 02)

4. புதிய பிரவேச வேளையில், அது தொடர்பான தகைமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு இவ்வமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு மாணவர் தொடர்பாக, மாதாந்தம் கொடுப்பனவு நடவடிக்கை இடம் பெறுதல் வேண்டும் என்பதுடன், மாதம் ஒன்றுக்கு மாணவர்கள் ஆகக்குறைந்து 15 நாட்கள் பாடசாலைக்குச் சமூகமளித்திருத்தல் வேண்டும். (ஒவ்வொரு மாதமும் வரவு அறிக்கை அதிபரின் பரிந்துரையுடன் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், வரவு அறிக்கை பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னரே கொடுப்பனவுகள் இடம்பெறும்) என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

6. இக் கொடுப்பனவு மாதாந்தக் கொடுப்பனவு ஆதலால், ஒவ்வொரு மாதமும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதி அல்லது அத்தினம் விடுமுறை தினமாயின் அடுத்து வரும் முதலாவது கடமை தினத்திற் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும். கொடுப்பனவு விபரங்களை ஒவ்வொரு மாதமும் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ இணைப்பு 04 இற்கு அமைய இவ்வமைச்சுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

7. கொடுப்பனவினை மேற்கொண்ட உறுதிச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளைத் தங்கள் அலுவலகத்திற் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

8. கொடுப்பனவுப் பயனாளி தங்கள் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து விலகி வேறொரு இடத்தில் வசிப்பாராயின் அல்லது பாடசாலைக் கல்வியினை இடைநடுவில் நிறுத்தி இருப்பாராயின் கொடுப்பனவுச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும்.

இவ் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பிரதேச செயலாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவி அத்தியாவசியமாவதுடன், இது தொடர்பாக மேலதிக தகவல்களை, அவசியமேற்படின் சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

| | | | |
|---|---|---|---|
| தொலைபேசி இலக்கம் | - | பணிப்பாளர் | - 0112186072 |
| | - | உதவிப் பணிப்பாளர் | - 0112877379 |
| | - | அலுவலகம் | - 0112877374 |

மேற்குறிப்பிட்ட உதவிக் கொடுப்பனவினை வழங்கும் இச்சுற்றுநிரூபம் 2015 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

இது தொடர்பாகத் தங்களின் உதவி மிகவும் பாராட்டப்படுகின்றது.

**(திருமதி) இமெல்டா சுகுமார்,**
செயலாளர்.

பிரதிகள்

1. செயலாளர், நிதி அமைச்சு - தங்கள் தயவான கவனத்திற்கு
2. செயலாளர், கல்வி அமைச்சு - தங்கள் தயவான கவனத்திற்கு
3. செயலாளர், சுகாதார அமைச்சு - தங்கள் தயவான கவனத்திற்கு
4. கணக்காய்வாளர் - தங்கள் தயவான கவனத்திற்கு
5. பிரதான கணக்காளர், சமூக சேவைகள் அமைச்சு - உரிய நடவடிக்கைக்காக
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமூக சேவைகள் அமைச்சு - உரிய நடவடிக்கைக்காக
7. அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் - தேவையான. நடவடிக்கையின்